ந.க.எண்:அ3/e-3460380/2025
நாள்:30.09.2025

மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை மாவட்டம்.

## சுற்றறிக்கை

பொருள்: **கிராம நிர்வாகம்** – சென்னை மாவட்ட வருவாய் அலகில் வருவாய் வட்டம் வாரியாக மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புதல் – விண்ணப்பங்களை பெற்று காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்திட அறிவுரைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட சுற்றறிக்கை நாள்:19.08.2025.
2. கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை அவர்களின் கடித எண்:636/Ser.8(1)/2025 நாள்:18.09.2025.

*********

பார்வை 1-இல் காணும் இவ்வலுவலக சுற்றறிக்கையில் சென்னை மாவட்ட வருவாய் அலகில் வருவாய் வட்டம் வாரியாக மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களுக்கான நியமனம் தொடர்பாக அனைத்து வருவாய் வட்டாட்சியர்களும் கால அட்டவணை, அறிவுரைகள், அரசாணைகள், வழிகாட்டு நெறிமுறைகள் ஆகியவற்றினையும், நடப்பில் உள்ள அனைத்து விதிகளையும் முறையாக கடைபிடித்து எவ்வித புகார்களுக்கும் இடமின்றி வெளிப்படையாக நேரடி நியமனத் தேர்வினை நடத்தி இறுதி பட்டியலினை மாவட்ட இணைய தளத்தில் வெளியிடுவதற்கு ஏதுவாக பணி ஆணை நகல்களுடன் தவறாது மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

இதனை தொடர்ந்து பார்வை 2-இல் காணும் கூடுதல் தலைமை செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், வருவாய் நிருவாகம் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆணையரகம், எழிலகம், சேப்பாக்கம், சென்னை அவர்களின் கடிதத்தில் மேற்படி வயது வரம்பு தொடர்பாக கீழ்கண்டவாறு திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| வ.எண். | பிரிவு | குறைந்தபட்ச வயது வரம்பு | அதிகபட்ச வயது வரம்பு |
|---|---|---|---|
| 1. | இதர வகுப்பினர் / பொது பிரிவினர் | 21 | 32 |
| 2. | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் / பிற்பட்ட வகுப்பினர் / பிற்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) | 21 | 39 |
| 3. | அட்டவணை வகுப்பினர் / அட்டவணை வகுப்பினர் (அருந்ததியினர்) / பழங்குடியினர் / ஆதரவற்ற விதவை (எந்த பிரிவினராக இருந்தாலும்) | 21 | 42 |

சென்னை மாவட்ட வருவாய் அலகில் வருவாய் வட்டம் வாரியாக மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட 20 கிராம உதவியாளர் காலிப்பணியிடங்களை நிரப்புவது தொடர்பாக கீழ்கண்டவாறு கால அட்டவணை நிர்ணயம் செய்யப்படுகிறது.

| S.No | Details | Timeline | |
|---|---|---|---|
| | | From | To |
| 1. | Last date for Receipt of Applications | 16-10-2025 (5:45 PM) | |
| 2. | Scrutiny and dispatch of call letter for reading and writing skill test | 17-10-2025 | 26-10-2025 |
| 3. | Reading and Writing skill test | 17-11-2025 | 24-11-2025 |
| 4. | Interview | 09-12-2025 | 16-11-2025 |
| 5. | Publishing of the Final Selection List | 31.12.2025 | |

இந்நேர்வில் மேற்படி பணி நியமனம் தொடர்பாக அனைத்து வருவாய் வட்டாட்சியர்களும் மேற்சொன்ன கால அட்டவணையை தவறாது கடைபிடித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/-ரஷ்மி சித்தார்த் ஜகடே.,
மாவட்ட ஆட்சியர்,
சென்னை மாவட்டம்.

/ஆணைப்படி/

அலுவலக மேலாளர் (பொது) 30/9/25

**பெறுநர்**
வட்டாட்சியர்கள்,
சோழிங்கநல்லூர் வட்டம் / மதுரவாயல் வட்டம்
திருவொற்றியூர் வட்டம் / மாதாவரம் வட்டம்
ஆலந்தூர் வட்டம் / எழும்பர் வட்டம்.

**நகல்**

1. வருவாய் கோட்டாட்சியர்கள்,
   (வட சென்னை கோட்டம் /
   மத்திய சென்னை கோட்டம் /
   தென் சென்னை கோட்டம்)
   சென்னை.

2. மாவட்ட தகவலியல் அலுவலர்,
   சென்னை மாவட்டம். (மாவட்ட இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டியது).